IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

S.C. No. 7 of 2015

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.ரங்கநாதன்

Date : 03.02.2025

**முதல் விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் கொடுவாள்களால், கட்டைகளால் தான் சுரேஷ் என்னை அடித்தார். தடுக்க வந்த போலிசாரையும் சுரேஷ் அடித்தார். சுரேஸ் மற்றும் அவருடைய அப்பா, மற்றும் ரமேஷ் ஆகியோர் வீடு கட்டனும் என்று ஊரில் பலபேரிடம் பணம் வாங்கியுள்ளார்கள். என்னிடமும் ரூபாய் 10000பணம் வாங்கியுள்ளார்கள். அதை கேட்டதால் தான் எங்களுக்குள் விரோதம் இருந்தது. என் மீதும் ஊர்காரர்கள் 22 பேர் பணம் கேட்டதால் வழக்கு போட்டுள்ளார். நான் தருமபுரி அரசு மருத்துவமனையில் போய் சேர்ந்தேன். பொம்மிடி போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் ***அ.சா.ஆ.1*** ஆகவும், இரண்டு உருட்டு கட்டைகள் ***சா.பொ.1*** ஆகவும், இரண்டு கொடுவாள்கள் ***சா.பொ.2*** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கோபாலும் நானும் நெருங்கிய உறவினர். ஒரே ஊரை சேர்ந்தவர்கள். என்னுடைய நிலத்திற்கும் கோபால் நிலத்திற்கும் நடுவே பிரிப்பதற்கு 2 அடி

அகலமுள்ள வரப்புள்ளது. என்னுடைய நிலம் மேலேயுள்ளது. கோபாலின் நிலம் கீழேயுள்ளது. என்னுடைய நிலம் கோபால் நிலத்திலிருந்து ஒரு முழம் மேலே உள்ளது. எதிரிகள் அவர்களுடைய நிலத்தில் 10 தேக்கு மரங்களை வைத்திருந்தார்கள் என்றாலும் அந்த மரங்களை நான் வெட்டி விட்டேன் என்றும் அவர்கள் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மரங்கள் என்னுடைய நிலத்தில் தான் உள்ளது.

2) நான் வேப்பமரத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட கோடுஅள்ளி கிராம பஞ்சாயத்து தலைவராக 5 ஆண்டுகள் 2001 முதல் 2005 வரை இருந்தேன். ஊரில் நான் சொல்வதை ஏற்று கொள்வேன் என்றால் சரிதான். சுதாவும் சுரேசும் 2010ல் திருமணம் செய்து கொண்டார்கள். சின்னதிருப்பில் நடந்தது. நான் திருமணத்திற்கு போகவில்லை. 2010ல் நடந்த வரவேற்பிற்கு நானும் ஊர் காரர்களும் போனோம். சுதாவும், சுரேசும் வேறு வேறு மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு சென்ற போது சுதாவும், சுரேசும் வேறு வேறு மதத்தை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. சுரேஸ் அவரது மனைவி சுதாவை நன்றாக பார்த்து கொண்டார் என்றும் அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

3) 2013ல் தருமபுரி மாவட்டத்தில் கலப்பு திருமணம் சம்பந்தமாக பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டது என்றால் சரிதான். 2013ல் எங்கள் ஊரிலும் யார் யார் கலப்பு திருமணம் செய்து கொண்டார்கள் என்று விசாரித்தேன் என்றால் சரியல்ல. நான் சுதாவிடம் அவருடைய சாதி சான்றிதழையும், படிப்பு

சான்றிதழையும் எடுத்து வர சொன்னேன் என்றால் சரியல்ல. சுதா வேறு சமூகத்தை சேர்ந்தவா் என்பதால் அவரை ஊரில் சேர்க்க கூடாது என்று முடிவு செய்தேன் என்றால் சரியல்ல. பண பிரச்சனை தான் காரணம் என்பதற்கு ஆதாரம் உள்ளது. எதிரிகள் யாரிடமும் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சுதாவின் சாதி பெயரை சொல்லி அவரையும் அவரது குடும்பத்தையும் அசிங்கமாக திட்டினேன் என்றால் சரியல்ல.

4) 2013ல் ஊரில் மாரியம்மன் கோவில் கும்பாபிசேகம் நடந்தது என்றால் சரிதான். நான் முதலில் எதிரி பழனியம்மாவிடம் கோவிலுக்காக வரி வாங்கினேன் என்றால் சரியல்ல. ஊர்கவுண்டா் தான் அது சம்பந்தமாக முடிவு செய்வார்கள். எதிரிகள் கோவில் கும்பாபிசேகத்திற்கு ரூபாய் 14000/ பணம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மாரியப்பன், பெரியசாமி, தங்கராஜ், சக்திவேல் பூசாரி தான் ஊர்தலைவர் மற்றும் பொதுவர்கள். எதிரிகள் கொடுத்த ரூபாய் 14000தில் ரூபாய் 13000திரும்பி கொடுத்து விட்டு ரூபாய் 1000வைத்து கொண்டு அவர்களை கோவிலுக்கு வரகூடாது என்று சொன்னோம் என்றால் சரியல்ல. சுதாவை தண்ணீர் எடுக்கும் போது அவரை சாதி பெயரை சொல்லி அநாகரிகமாக சொல்லி திட்டியும் என்னால் தான் ஊரில் பிரச்சனை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக ஆர்டிஓ வந்து விசாரித்தார்கள் என்றால் ஆர்டிஓ விசாரிக்கும் போது நான் இல்லை. 22 போ் மீது ஊரை விட்டு தள்ளிவிட்டோம் என்று வழக்கு போட்டார்கள். நான் சுதாவிடம் யாரும் பேசகூடாது கோவிலுக்கு வரகூடாது, தண்ணீா் எடுக்க கூடாது என்றும்

எதிரிகள் குடும்பத்துடன் பேசினால் ரூபாய் 10000அபராதம் என்று பேசினோம் என்றால் சரியல்ல. எதிரி சுதா தான் முதலில் வழக்கு கொடுத்தார். அதற்கு பிறகு தான் நான் இந்த வழக்கை போட்டேன்.

5) வருவாய் கோட்டாசியர், வட்டாட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர் வந்து ஊரில் விசாரணை செய்தார்கள். கோபால் வீட்டிலும் விசாரித்தார்கள். பொது ஆட்களிடமும் விசாரித்தார்கள். அதிகாரிகள் வரும் போது நான் ஊரில் இல்லை. 4.12.2013அன்று தான் மாலை 5 மணிக்கு வந்தார்கள். எதிரிகள் குடும்பத்தை ஊரிலிருந்து தள்ளி வைத்த பிரச்சனையால் அதிகாரிகள் வந்து விசாரணை செய்தார்கள். நான் தான் எதிரிகள் குடும்பத்தை ஊரிலிருந்து தள்ளி வைக்க முடிவு செய்தேன் என்றால் சரியல்ல. ஊர்காரர்கள் தான் முடிவு செய்தார்கள்.

6) நான் மருத்துவமனைக்கு அடிப்பட்ட உடனே சென்று விட்டேன். நேரம் நியாபகம் இல்லை. நான் மருத்துவரிடம் என்னை இரண்டு கொடுவாள்கள், இரண்டு உருட்டு கட்டைகளால் தாக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன். பொம்மிடி காவல் நிலையத்திலிருந்து அன்று இரவே 10, 11 மணிக்கு வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னை தவிர அன்று இரவு வேறு யாரையும் விசாரிக்கவில்லை. அதற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னை தவிர போலிசார் வேறு யாரையும் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்சில் என்னுடன் வேறு யார் இருந்தார் என்று எனக்கு தெரியாது.

7) நான் வண்டியில் சென்று கீழே விழுந்தேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு போட்டு இழப்பீடு தொகையும் வாங்கிவிட்டேன் என்றால் சரிதான். கோபால் வீட்டிற்கும் யசோதா கடைக்கும் 200அடி தூரம் இருக்கும். 2013ல் சுதா பாதுகாப்பு கேட்டதால் கோபால் வீட்டில போலிசா எப்போதும இருப்பார்கள என்றால் எப்போதும இருப்பார்கள். போலிசா ஒரு வருடமாக அங்கு பாதுகாப்பு பணியில் இருந்தார்கள். அதிகாரிகள் வந்து ஊரில் விசாரித்து சென்ற பிறகு அதை தெரிந்து கொண்டு கோபால் வீட்டிற்கு சென்று போலிசார் அங்கு இருந்த போது நான். செந்தில்குமார், சதீஸ்குமார் ஆகியோர் அவர்களை அடித்தோம என்றால சரியல்ல. சுரேஷ், ரமேஷ மண்டையில அடித்து கோபாலின் வலது கையை முறித்து காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. நான எதிரிகளை அடித்ததால அருகில இருந்த வேறு சமூகத்தினா வந்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார்கள என்றால சரியல்ல. பின்னரும் நாங்கள எதிரிகளை தொந்தரவு செய்ததால சக்கரவர்த்தி என மீது தாழ்த்தப்பட்ட ஜாதினரை கொடுமை செய்வதாக புகார் கொடுத்தார் என்றால் என் மீது கொடுக்கவில்லை. என் மீது சக்கரவர்த்தி குற்ற எண் 13/2014 எஸ்டிசி 1228/2014 நாள 3.11.2014 படி நான அபராதம செலுத்தினேன என்றால் போலிசா கட்ட சொன்னதால நான், எனது மனைவி ரோஜா, ராதா, வெண்ணிலா, கிருஷ்ணன் அபராதம் செலுத்தினோம்.

8) நான் பெண்களை முன்னிலைபடுத்தி எதிரிகளை அசங்கமாக பேசியதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் அபராதம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வரை எதிரிகளை ஊரில் நடக்கும் பொது நிகழ்ச்சியில் சேர்த்து கொள்ளாமல் கொடுமை செய்கிறேன் என்றால் சரியல்ல. 2வது முறையாக சேர்ந்த கும்பாபிசேகத்தில் எதிரிகள் கலந்து கொண்டார்கள். ஊரில் பெண்கள் எதிரிகள் மீண்டும் பிரச்சனை செய்வார்கள் என்று பாயாசத்தில் விசத்தை கலந்து விட்டார்கள். குடித்து விட்டு பெண்கள் விழுந்து விட்டார்கள். அவர்கள் மருத்துவமனைக்கு எடுத்து சென்று விட்டார்கள். எதிரிகள் கோவிலுக்கு வரகூடாது என்பதற்காக தான் பாயாசத்தில் விசத்தை கலந்தார்கள் என்றால் சரியல்ல. கேஸ் போட்டு விடுவார்கள் என்று அது போல் செய்தார்கள். எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றாலும் நான் தான் அவர்களை அடித்தேன் என்றாலும் விபத்தில் ஏற்பட்ட காயங்களைவைத்து எதிரிகள் அடித்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து 2001ல் ஏற்பட்டது. வழக்கு சான்று பொருள்களாலும், கொடுவாளாலும் என்னை தாக்கினால் எனக்கு பெரிய அளவு காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.07 of 2015**

} Prosecution
Deposition of P.W. 2 (L.W. 3 ) } Defence
}

Name of the Witness : திரு. சதீஸ்குமார்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.02.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பெங்களூரில் வேலை செய்து வருகிறேன். நான் டீச்சர் டிரெயினிங் படித்துள்ளேன். நான் அ.சா.1னின் மகளை திருமணம் செய்துள்ளேன். அ.சா.1

எனது தாய்மாமா. எதிரிகளை எனக்கு தெரியும். 04.12.2013 தேதி சாயங்காலம் 5, 5.15 மணிக்கு ஊரில் சுரேஸ் பிரச்சனை சம்பந்தமாக பொய் புகார் கொடுத்ததால் ஆர்டிஓ, விஏஓ, இன்னும் சில அதிகாரிகளும் விசாரணைக்கு வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் போன பிறகு சுதா என் மாமனாரால் தான் பிரச்சனை என்று கொடுவாளால் தாக்கி எனது மாமனாருக்கு ரத்தம் வந்தது. சுரேஸ், கோபால், ரமேஷ் 15 பேர்களிடம் பணம் வாங்கியிருக்கிறார்கள். பணம் வாங்கியதற்கு ஆவணம் இல்லை. பணம் கொடுத்தவர்கள் பணத்தை கேட்டதால் அவ்வப்போது பிரச்சனை ஏற்பட்டது. இந்த பிரச்சனை நடப்பதற்கு 2 1/2 வருடத்திற்கு முன்பாக சுரேஷ் சுதாவை திருமணம் செய்து கொண்டார். நானும், எனது மச்சான், ஊர்காரர்கள் எல்லோரும் சேர்ந்து தான் திருமணத்தை செய்து வைத்தோம்.

2) சுதா ஆதிதிராவிடா் இனத்தை சேர்ந்தவா் என்பதால் பணம் கொடுக்காமல் தப்பிப்பதற்காக பணம் கொடுத்த 22 பேர்கள் மீது சாதி பேரை சொல்லி அவமானப்படுத்திய சொல்லி புகார் கொடுத்து விட்டார்கள். கோபால் வீட்டு தோட்டமும், எனது மாமா வீட்டு தோட்டமும் பக்கம் பக்கமுள்ளது. அதனால் திரும்ப திரும்ப எனது மாமா சாதி பெயரை சொல்லி திட்டிவிட்டதாக பொம்மிடி காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்துள்ளார்கள். இது சம்பந்தமாக விசாரணை செய்ய அதிகாரிகள் ஊருக்கு வந்தார்கள். அவர்கள் சென்று விட்ட பிறகு நான் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு ஊர்காரர்கள் போன் செய்து யசோத கடை அருகே எனது

மாமாவை சுதாவும், சுரேசும் கொடுவாளால் வெட்டி விட்டதாகவும், பல் கொட்டி ரத்தம் வந்ததாக சொன்னார்கள். உடனே கோபால் வீட்டிற்கு முன்னால் இருக்கும் ரோடிற்கு சென்று நானும், எனது மச்சான் செந்தில்குமாரும் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டோம். இவர்களை விடாதீர்கள் இவர்களை ஒழித்து கட்டினால் தான் விடிவு வரும் என்று பழனியம்மாள் சொன்னார். அதற்கு பிறகு கோபால், ரமேஷ். ரவி. சங்கர், பழனியம்மாள் வீட்டின் அருகே இருந்த கற்கள், கட்டைகளால் எங்கள் இருவரையும் தாக்கினார்கள். தாக்கியதில் எனது மச்சானுக்கு மூக்கிலும், இடது காலிலும் காயம் ஏற்பட்டது. என்னை கோபால் ரமேஷ். பழனியம்மாள் கல்லால் தாக்கியதில் காலில் காயம் ஏற்பட்டது. என்னை வயிற்றில் உதைத்தார்கள். எனக்கு மயக்கம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்சில் தருமபுரி ஜிஎச்சில் சேர்த்தார்கள். நான் 3 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1, சா.பொ.2ல் தான் எதிரிகள் தாக்கினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

3) சுதா, சுரேசின் திருமணத்தை நான், செந்தில், ஊர்காரர்கள் 10 பேர் சேர்ந்து திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின் போது சுதா என்ன சமூகத்தை சேர்ந்தவர் என்று தெரியாது. திருமணத்திற்கு பிறகு சுதாவை சுரேசும் அவரது குடும்பமும் நன்றாக பார்த்துகொண்டார்கள் எந்த பிரச்சனையும் இல்லை. அந்த திருமணத்திற்கு 2, 2 1/2 வருடம் வரை எந்த

பிரச்சனையும் இல்லாமல் இருந்தார்கள். எதிரிகள் கடன் அவர்களுடைய உறவினர்களிடமே வாங்கியிருக்கிறார்கள். அதற்கு அத்தாட்சி எதுவும் இல்லை. அது சம்பந்தமாக வழக்கு எதுவும் இல்லை. அது போல் கடனே வாங்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) சுதா வேறு ஒரு சமூகத்தை சேர்ந்தவா் என்பதால் நான், செந்தில்குமார், ரங்கநாதன் ஆகியோா் ஊரை விட்டு ஒதுக்கி வைத்தோம் என்றால் சரியல்ல. சுரேஸ் வேறு சமூகத்தை சேர்ந்த பெண் சுதாவை திருமணம் செய்து கொண்டதால் பல்வேறு நாளிதழில் செய்திகள் வந்துள்ளது என்றால் சரிதான். இது சம்பந்தமாக பல்வேறு மாவட்ட அலுவலகங்களில் விசாரணை நடந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் கலந்து கொள்ளவில்லை. கும்பாபிசேகத்தில் ஊரில் யாரிடமும் வரி வாங்கவில்லை. ஊர்பண்டு மூலமாக பணம் சேர்த்து வைக்கப்பட்டு அந்த பணத்தின் மூலமாக மாரியம்மன் கோவில் திருவிழா நடந்தது என்றால் சரிதான். அம்மன் கோவிலுக்கு டொனேசன் கொடுக்கும் பணத்தை வைத்து தான் திருவிழா நடந்தது.

5) ஊரில் கோபாலுக்கும் அவருடைய சகோதரர்க்கும் ஏற்பட்ட நில பிரச்சனை காரணமாகவும், ஊரில் கடன் வாங்கியதை திரும்ப கொடுக்க முடியாததால் பொய்யான புகார் எதிரிகள் கொடுத்துள்ளார்கள். சுதா வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் ஊரில் சுதா தண்ணீா எடுக்க கூடாது. பொது வழி தடத்தில் செல்லகூடாது ஊரில் எந்த விசேசத்திலும் கலந்து கொள்ள கூடாது என்பதற்காக அவர்களை ஊரிலிருந்து தள்ளி வைக்கப்பட்டது என்றால்

சரியல்ல. பெரியசாமி, மாரியப்பன், தங்கராஜ், சக்திவேல் மற்றும் ரங்கநாதன் உட்பட்ட 22 பேர் எதிரி சுதாவை ஊரிலிருந்து தள்ளி வைத்ததால் தான் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. 4.12.2013 அதிகாரிகள் ஊரில் வந்து விசாரித்த போது நான், செந்தில் அங்கு இல்லை. அப்போது அதிகாரிகள், பொது மக்கள், ஊர்காரர்கள் அங்கு இருந்தார்கள். சுதாவின் வீட்டிற்கு போலிசார் பாதுகாப்பிற்காக ஒரு வருடம் இருந்தார்கள். சுதா அவர் கலப்பு திருமணம் செய்து கொண்டதால் அவருடைய பாதுகாப்பிற்காக பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. சுதாவிற்கு ரங்கநாதன் அச்சுறுத்தியதால் தான் அதிகாரிகள் அங்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. அதிகாரிகள் வந்த விசாரணை செய்யும் போது நான் அங்கில்லை. அதிகாரிகள் 4, 5 மணி அளவில் அங்கு வந்து 1/2 மணி நேரம் விசாரணை செய்தார்கள். நான் அங்கு போகும் போது எதிரியின் வீட்டிற்கும் யசோதாவின் கடைக்கும் நடுவே அவரை உட்கார வைத்து இருந்தார்கள். அப்போது ஊர்காரர்கள் 10, 15 பேர் இருந்திருப்பார்ாகள்.

6) அதிகாரிகள் சென்ற பிறகு நான், ரங்கநாதன், செந்தில்குமார், ரோஜா மற்றும் அனைவரும் எதிரிகள் வீட்டிற்கு அவர்களை கட்டைகளால் தாக்கினோம் என்றால் சரியல்ல. அவர்களை தாக்கி விட்டு அதை மறைப்பதற்காக நாங்கள் அவர்களுக்கு முன்பாகவே சென்று அட்மீட் ஆகிவிட்டோம் என்றால் சரியல்ல. நான் செந்தில்குமார், ரங்கநாதன் எல்லோரும் சேர்ந்து சுரேஷ், ரமேஷ் ஆகியோரை தாக்கி கோபாலுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அங்கிருந்த காவலர்கள்

சொல்லியும் கேட்காமல் வெளிதனமாக அவர்களை தாக்கினோம் என்றால் சரியல்ல. அருகில் இருந்த வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் தான் அவர்களை காப்பாற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல.

7) மாரி மகன் சக்கரவர்த்தியை தெரியும். செந்தில்குமார், ரங்கநாதன், நான் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்த அன்றே 6, 6.30மணிக்கு போனோம். நான் மருத்துவரிடம் 6, 7 பேர் அடித்ததாக சொன்னேன். அன்றைய இரவும் அடுத்த நாள் காலையும் காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். நான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேன். அதற்கு பின்பு எந்த போலிசார் என்னையும் விசாரிக்கவில்லை. வேறு நபரையும் விசாரிக்கவில்லை.

8) நான், ரங்கநாதன், செந்தில்குமார் எல்லோரும் சேர்ந்து எதிரிகள் குடும்பதை ஒதுக்கி வைத்து விட்டோம் என்றால் சரியல்ல. கடன் கொடுக்காமல் தப்பிப்பதற்காக எதிரிகள் புகார்கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேப்பமரத்தூர் ஊரை சேர்ந்தவர்கள் எல்லோரும் எதிரிகள் குடும்பத்தை பிரச்சனை செய்ததால் அவர்களுக்கு போலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தான் எதிரிகள் எந்த விசேசத்திலும் கலந்து கொள்ள கூடாது என்று பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. இந்த குற்ற வழக்கிற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.07 of 2015**

Deposition of P.W.3 (L.W. 4 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.ராஜாங்கம்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.02.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2ஐ தெரியும். சுமார் 13 வருடத்திற்கு முன்பு ரூபாய் இருபது ஆயிரம் சுரேசிற்கு பணம்

கடனாக காலேஜ்க்கு சுரேசின் தம்பிக்கு பணம் கட்ட வேண்டும் என்று கேட்டதால் பணம் கொடுத்தேன். பணத்தை திரும்ப கேட்ட போது பணத்தை தர முடியாது உன்னால் என்ன செய்யமுடியுமோ அதை செய்து கொள் என்று சொல்லிவிட்டார்.

*2)* பணம் கொடுத்து பிரச்சனை ஏற்பட்டதால் எங்கள் மீது எதிரிகள் வழக்கு கொடுத்தார்கள். அதிகாரிகள் எதிரிகளுக்கு காவலுக்கு வந்தார்கள். ரங்கநாதன் அதிகாரிகளுடன் பேசி கொண்டிருந்தார். சுதா ரங்கநாதனை அடிக்க வேண்டும் என்று சொன்னார். புண்டாவாயனே என்று கெட்ட வார்த்தையால் திட்டி உன்னை ஒழித்தால் தான் நிம்மியாக இருக்க முடியும் என்று சுதா சொல்லி கட்டையால் இடது பக்க கன்னத்தில் அடித்தார். ரங்கநாதன் கீழே விழுந்து விட்டார். ஊர்காரர்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்து மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். பிறகு அனைவரும் சென்று விட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ரங்கநாதனுக்கு மட்டும் தான் அடிப்பட்டது. வேறு யாருக்கும் அடிப்படவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

*13* வருடத்திற்கு முன்பாக பணம் கொடுத்தேன். பிரச்சனை ஏற்படுவதற்கு முன்பாக தான் நான் பணம் கொடுத்தேன். பணம் கொடுத்ததற்கு எதுவும் எழுதி வாங்கவில்லை. பணம் கொடுத்ததற்கு எந்த அத்தாட்சியும் எழுதி வாங்கவில்லை. அது போல் நான் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

ரங்கநாதன் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். ரங்கநாதன் ஊரில் என்ன நியாயம் பேசினாலும் அவர் பேச்சுக்கு நாங்கள் கட்டுபடுவோம் என்றால் சரிதான்.

2) சுரேஷ் சுதாவை திருமணம் செய்து அந்த ஊரில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு அவர்களுக்குள் எந்த சண்டையும் இல்லை என்றால் சரிதான். சுதா திருமணமாகி இரண்டு வருடங்கள் கழித்து தான் அவர் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்று தெரிய வந்தது என்றால் சரிதான். சுதா வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் நானும் ஊரில் உள்ளவர்களும் அவரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தோம் என்றால் சரியல்ல. தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சுதா கொடுத்த புகாரின் மீது நான் விசாரணைக்கு போகவில்லை. எதிரிகள் வீட்டிற்கு போலிசார் பாதுகாப்பிற்கு இருந்தார்கள் என்றால் சரிதான். ஒரு வருடத்திற்கு போலிசார் பாதுகாப்பிற்கு இருந்தார்கள். பணம் வாங்கியது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு போலிசார் பாதுகாப்பிற்கு வந்தார்கள்.

3) எதிரிகள் அவர்களை சாதியின் காரணமாக ஒதுக்கி வைத்ததால் அது சம்பந்தமாக புகார் கொடுத்தார்கள் என்றாலும் அதனால் தான் போலிசில் பாதுகாப்பு கொடுத்தார்கள் என்றாலும், பணம் வாங்கியது சம்பந்தமாக போலிசார் பாதுகாப்பு கொடுத்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. சுதாவை மேலும் மேலும் அவருக்கு தொந்தரவு கொடுத்ததால் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மீது புகார் கொடுக்கவில்லை.

அதிகாரிகள் பகல் 11, 12 அளவிற்கு வந்தார்கள். அதிகாரிகளிடம் ரங்கநாதன் பேசினார். நான் அப்போது சற்று தள்ளி 20 அடி தொலைவில் இருந்தேன். ரங்கநாதனுக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்த பிறகு தான் அதிகாரிகள் வந்தார்கள்.

4) கோபால் ரங்கநாதன் மீது கொடுத்த புகாரின் மீது அரூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையுள்ள குற்ற எண் 409/2013 வழக்கில் நான் சாட்சி சொன்னேன். நானும் என் மனைவி ராணியும் சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவும் இல்லை. நான் எதுவும் கையெழுத்து போடவில்லை.

5) நானும் ரங்கநாதனும் எதிரிகளை ஊரை விட்டு ஒதுக்கி வைத்ததால் நான் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் நான் ரங்கநாதனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோபால் கொடுத்த புகாரில் ரங்கநாதனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.07 of 2015**

| | | | |
|---|---|---|---|
| | | } | Prosecution |
| Deposition of P.W.4 | (L.W.6 ) | } | Defence |
| | | } | |

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திருமதி.ராணி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.02.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அசா.2ஐ எனக்கு தெரியும். அ.சா.3 என்னுடைய கணவர். சுமார் 10 வருடத்திற்கு

முன்பு ரங்கநாதனுக்கும் சுரேஸ் வீட்டாருக்கும் சண்டை நடந்தது. அப்போது நான் வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்தேன். அப்போது கூச்சல் கேட்டு நானும் போனேன். அப்போது சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். எனக்கு படப்படப்பாக இருந்ததால் நான் வந்து விட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

4, 4 மணிக்கு மேல் கூட்டாக இருந்தது. அதிகாரிகள் வரும் போது தான் கூட்டமாக இருந்தது. அப்போது எனது கணவர் ராஜாங்கம் அங்கிருந்தாரா என்று நான் பார்க்கவில்லை. ரமேஸ் போன் செய்து பணம் கேட்டதால் ரமேசின் சின்னதம்பியின் படிப்பி செலவிற்கு பணம் கேட்டதால் சுரேசிடம் பணம் ரூ20000 கொடுத்தோம். சண்டைக்கு முன்பாக பணம் கொடுத்தேன். எத்தனை வருடத்திற்கு முன்பாக என்று தெரியவில்லை. என் மகள் சம்பாதித்து பணம் கொடுத்ததை வைத்து நான் பணம் கொடுத்தேன். பணம் கொடுத்தற்கு எதுவும் அத்தாட்சியாக எழுதி வாங்கவில்லை.

2) கூட்டாக இருந்ததால் யார் யாருக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. தனிப்பட்ட முறையில் போலிசார் என்னிடமோ, எனது கணவரையே விசாரிக்கவில்லை. ஒரு வருடமாக போலிசார் எதிரிகளுக்கு பாதுகாப்பாக இருந்தார்கள். எதற்கான போலிசார் பாதுகாப்பிற்கு இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

*3)* சுதா எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. சுதா வேப்பமரத்தூரை சேர்ந்தவர் இல்லை. வெளியூரை சேர்ந்தவர். திருமணம் ஆக பிறகு சுதாவை அவரது கணவரும் அவரது குடும்பத்தாரும் நல்ல முறையில் பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். ரங்கநாதன் ஊர்தலைவராக இருந்தார். அவர் சொன்னால் அனைவரும் கேட்போம். சுதா ரங்கநாதன் மீதும் ஊர்காரர் மீதும் புகார் கொடுத்தது தெரியும். காசு கொடுத்தது சம்பந்தமாக புகார் கொடுத்தார். சுதா வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் ஊர்காரர்கள் எல்லோரும் அவரை ஒதுக்கி வைத்தோம் என்றால் சரியல்ல.

*4)* என் மகள் கவிதா. 2023ல் மாரியம்மன் கோவில் கும்பாபிசேகம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருவிழாவை என் மகள் கவிதா, ரங்கநாதனின் மனைவி ரோஜா. ராதா, வெண்ணிலா முன்னிற்று நடத்தினார்கள் என்றால் சரிதான். *10* ஆண்டுகள் கழித்து தான் மாரியம்மன் கோவில் கும்பாபிசேகம் நடந்தது என்றால் சரிதான். *10* வருடங்களாக ஏன் கோவில் கும்பாபிசேம் நடக்கவில்லை என்று எனக்கு தெரியாது. சுதா குடும்பத்தை ஊரிலிருந்து தள்ளி வைத்ததாலும் கும்பாபிசேகத்திற்கு எதிரி குடும்பத்தினா் கலந்து கொள்ள கூடாது என்பதால் தான் *10* வருடமாக நடக்கவில்லை என்றால் சரியல்ல.

*5)* கோவில் காசு வைத்து தான் கும்பாபிசேகம் நடத்தப்பட்டது. வரி வசூலிக்கப்படவில்லை. கோபால் குடும்பத்தினர் போலிஸ் பாதுகாப்புடன் தான் சாமி கும்பிட வந்தார்கள் என்றால் சரிதான். எதிரி குடும்பத்தினா் சாமி கும்பாபிசேகத்தில் கலந்து கொள்ளகூடாது என்பதற்காக கவிதா விசம் கலந்த

பாயாசத்தை குடித்து விட்டார் என்றால் குடித்த பிறகு தான் தெரிய வந்தது. என் மகள் கவிதா மற்றும் இதர பெண்கள் எதிரிகள் குடும்பத்தினர் கோவிலுக்கு வரகூடாது என்று விசம் கலந்த பாயாசத்தை குடித்தார்கள் என்றாலும் அதிகாரிகள் மருத்துவமனையில் அவர்களை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

6) ரங்கநாதன் தான் எதிரிகளை அடித்தார் என்றாலும் நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு ரூபாய் 20000 கொடுக்கவில்லை என்றாலும் பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.07 of 2015**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.5 (L.W.10 ) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு.முருகன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.02.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். வேப்பமரத்தூர் தண்ணீர் டேங் ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1, அ.சா.2யை தெரியும். நான் விவசாயமும் செய்து வருகிறேன். 5.12.2013 அன்று நானும் பஞ்சாயத்து விசயமாக நானும், ரவி தலைவரும் வேப்பமரத்தூரில் வேலை விசயமாக நின்று பேசி கொண்டிருந்தோம். பொம்மிடி போலிசார் பிரச்சனை நடந்த இடம் எது என்று விசாரிக்க வந்தார்கள். போலிசார் அந்த இடத்தில் தான் சம்பவம் நடந்தது என்பதற்காக எங்களிடம் சாட்சி கையெழுத்து போட்ட சொன்னார்கள். அதில் நானும் ரவி தலைவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். கோபால் குடும்பத்தினருக்கும் ரங்கநாதனுக்கும் அடிதடி பிரச்சனை என்று தெரிந்தது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய சொந்த ஊர் வேப்பமரத்தூர். எதிரிகளுக்கும், ரங்கநாதனுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. சம்பவம் அங்கு நடந்ததாக என்று கேட்டு மேப் போட்டதாக சொல்லி கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். அதிலுள்ள விவரங்கள் முழுவதுமாக தெரியாது. வெற்று பேப்பரில் கையெழுத்து போடவில்லை. நான் கையெழுத்து போடும் போது

ஊர்காரர்கள் *10* பேர் இருந்திருப்பார்கள். அந்த *10* பேரில் நானும், தலைவர் ரவியும் பக்கத்தில் இருந்ததால் கையெழுத்து போட்டோம், நான் பார்வை மகஜரில் காவல் நிலையத்தில் தான் கையெழுத்து போட்டேன் என்றும், ரங்கநாதன் கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.07 of 2015**

| | | |
|---|---|---|
| | | } Prosecution |
| Deposition of P.W.6 | (L.W.13 ) | } Defence |
| | | } |
| Name of the Witness | | : திரு.பூமாணிக்கம் |
| Father/Husband Name | | : |
| Village | | : |
| Taluk | | : |
| Caste | | : |
| Religion | | : |
| Calling | | : |
| Age | | : |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.02.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2யை தெரியும். 2013ல் சாயங்காலம் எதிரிகளும் ரங்கநாதனும் யசோதா கடை அருகே சண்டை போட்டு கொண்டார்கள். 3/4 கிமீ தள்ளியிருந்த என் காட்டில் நான் அப்போது இருந்தேன். நான் ஊருக்குள் வந்தேன். அப்போது இருவரும் ஒருவரை ஒருவர் அடித்து கொண்டிருந்தார்கள். நானும் சந்திரனும் விலக்கி விட்டோம். எதிரி சுதா சாட்சி அவரை அடையாளம் காட்டி கல்லால் வலது கன்னத்தில் அடித்தார். பின்னர் ஆம்புலன்சுக்கு போன் செய்து ரங்கநாதனை மருத்துமனைக்கு அழைத்து போனார்கள். எதற்காக சண்டை போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நானும் தருமபுரி ஜிஎச்சுக்கு அவர்களுடன் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் ரங்கநாதனும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். நானும் அவரும் ஒன்றாக தான் எப்போதும் போவோம். சுதா திருமணமாகி சந்தோசமாக இருந்து வந்தார். சுதா குடும்பத்தினரை ஊரில் ஒதுக்கி வைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரி குடும்பத்தில் கலப்பு திருமணம் செய்ததால் அவர்களை ஊரில் ஒதுக்கி வைத்ததாக செய்தி தாழில் செய்தி வந்த

விவரம் எனக்கு தெரியும். மாவட்ட நீதிபதி, வருவாய் துறை அதிகாரிகள் எங்கள் கிராமத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

2) போலிசார் பாதுகாப்பிற்கு இருந்தார்கள். போலிசாரையும் எதிரிகள் அடித்து விட்டார்கள். 13 வருடத்திற்கு முன்பாக என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. ரங்கநாதனுடன் 108 ஆம்புலன்சில் நிறைய பேர் வந்தார்கள். எதிரிகள் குடும்பத்தினரும் அவர்களுக்கும் அடிப்பட்டதாக மருத்துவமனைக்கு வந்தார்கள். யாருக்கு அடிப்பட்டதோ அவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைக்கு அழைத்து செல்லாமல் நான் ரங்கநாதனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது தவறு என்றால் சரியல்ல.

வேப்பமரத்தூரில் வேறு சமூகத்தை சேர்ந்தவரும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். மாரி மகன் சக்கரவர்த்தி என்பவரும் ஊரில் இருக்கிறார். போலிசார் தடுத்தும் ரங்கநாதன் அவரது மகன், மருமகள் தான் எதிரிகளை அடித்தார்கள் என்றால் சரியல்ல. 2023ல் கோவில் கும்பாபிசேகம் நடந்தது என்றால் சரிதான். எதிரிகள் பிரச்சனை செய்ததால் கோவில் கும்பாபிசேகம் நடக்கவில்லை. என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. கும்பாபிசேகத்திற்கு ஒவ்வொரு வீட்டிலும் ரூபாய் 5000 வாங்கப்பட்டது என்றால் சரிதான். கோபால் குடும்பத்தினரிடம் பணம் வாங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது.

எதிரிகள் கோவிலில் சாமி கும்பிட வரும் போது போலிசாரும் பாதுகாப்பிற்கு வந்தார்கள் என்றால் போலிசாரும் சாமி கும்பிட வந்தார்கள். எதிரி குடும்பத்தினரை சாமி கும்பிட அனுமதிக்காததால் தான் சுதா காவல்

நிலையத்தில் மனு கொடுத்து போலிசார் பாதுகாப்பாக வந்தார்கள் என்றால் சரியல்ல. ரங்கநாதன் மனைவி ரோஜா, கவிதா, வெண்ணிலா சுதா கோவிலுக்கு வரகூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து பாயாசத்தில் விசம் கலந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. விவரம் எல்லாம் எனக்கு தெரியும் என்றாலும் ரங்கநாதன் எனது நண்பா் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை ரங்கநாதனை அடிக்கவில்லை என்றாலும் ரங்கநாதன் எதிரிகளை அடித்தார் என்றால் சரியல்ல. சுதா ரங்கநாதனை கல்லால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.07 of 2015**

| | | | |
|---|---|---|---|
| | | } | Prosecution |
| Deposition of P.W.7 | (L.W.14 ) | } | Defence |
| | | } | |

Name of the Witness : திரு.சந்திரன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.02.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2யை தெரியும். சுமார் 12, 13 வருடத்திற்கு முன்பு ரங்கநாதன் குடும்பத்தினரும், எதிரிகள் குடும்பத்தினரும் சண்டை போட்டு கொண்டதாக சொன்னார்கள். அப்போது நான் அங்கு இல்லை. நான் அப்போது தருமபுரியில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் எங்க ஊரை சேர்ந்த முன்னால் தலைவர் ரங்கநாதன் எனது நண்பர் என்றும், அவரது நிலத்திற்கு அருகில் எங்க ஊரை சேர்ந்த குப்பாகவுண்டார் மகன் கோபால் என்பவரின் நிலம் உள்ளது என்றும், அவர்கள் இருவருக்கும் நிலம் சம்பந்தமாக

பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வருகிறது என்றும், மேற்படி கோபாலுக்கு 4 மகன்கள் உள்ளார்கள் என்றும், அவரது மூத்த மகன் சுரேஷ், மொரப்பூர் பக்கமுள்ள பறையப்பட்டியை சேர்ந்த சுதா என்ற பெண்ணை காதலித்து 2 வருடத்திற்கு முன்பு திருமணம் செயத கொண்டான் என்றும், அவனுக்கு 1 1/2 வயதில் ஆண்குழந்தை உள்ளது என்றும், மேற்படி சுதா ஆதி திராவிட சமூகத்தை சேர்ந்தவர் என்றும், கோபால் தனது வீடு கட்டவும், தனது மகன்களை படிக்க வைக்கவும் எங்கள் ஊரை சேர்ந்த பலரிடம் கடன் வாங்கியுள்ளார் என்றும்,

2) அதே போல் கோபால் மகன் சுரேஷ் எனது பெரியம்மா மகன் முருகனிடம் வேலை செய்த போதும் அவனது தம்பி ரமேசுக்கு கடை வைத்து கொடுக்கவும் முருகனிடம் பணம் கடனாக வாங்கியுள்ளார் என்றும், அவர்கள் ருபாய் 15 லட்சம் வரை பணம் கடனாக வாங்கியுள்ளார்கள் என்றும், அந்த பணத்தை கடன் கொடுத்தவர்கள் திருப்பி கேட்ட போது பணத்தை திருப்பி தராமல் பிரச்சனை ஏற்பட்டு அவர்களிடம் பணம் வாங்கவில்லை என்று கூறி வருகிறார்கள் என்றும், கடன் வாங்கிய பணத்தை அவர்களிடம் திருப்பி கேட்டது முதல் அவர்கள் ஊரில் எல்லோரிடமும் சண்டை போட்டு வருகிறார்கள் என்றும்,

3) அதேபோல் கோபாலுக்கும் அவரது அண்ணன் கோவிந்தனுக்கும் நிலபிரச்சனை உள்ளது என்றும், அது சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு உள்ளது என்றும், அதனால் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கோபால் தனது மருமகள்

சுதா மூலமாக சாதி பெயரை சொல்லி திட்டியதாகவும், கோயிலுக்குள் நுழையக்கூடாது என்று தடுத்ததாகவும், ஊர்கட்டுபாடு போட்டு ஊரை விட்டு ஒதுக்கியதாக எங்க ஊர் முக்கியஸ்தர்கள் மேற்படி ரங்கநாதன் மற்றும் கடன் கொடுத்தவர்கள் மீதும் பொம்மிடி காவல் நிலையத்தில் பொய்யான புகாரை கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அது முதல் ரங்கநாதன் குடும்பத்துக்கும், அவர்களுக்கும் பகை இருந்து வருகிறது என்றும், அந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள நிலையில் ரங்கநாதன் வேப்பமரத்தூரில் யசோதா பெட்டிகடை முன்பு இருந்த போது மேற்படி சுதாவை பார்த்து சாதி பெயரை சொல்லி திட்டியதாக மீண்டும் ஒரு பொய் புகார் கொடுத்துள்ளார் என்றும், அதுக்கும் வழக்கு போட்டு விசாரணை செய்தார்கள் என்றும்.

4) நேற்று 4.12.2013ம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு தருமபுரி ஆர்டிஓ, அரூர் டிஎஸ்பி, பொம்மிடி இன்ஸ்பெக்டர் மற்றும் ஆபீசர், விஏஓ எல்லோரும் எங்க ஊருக்கு வந்து கோபால் வீட்டாரிடம் விசாரித்து விட்டு போனார்கள் என்றும், அவர்கள் போன பிறகு மாலை சுமார் 5.30மணிக்கு ரங்கநாதன் வேப்பமரத்தூருக்கு வந்தவர் யசோதா கடை பக்கம் வந்த போது மேற்படி கோபால் மகன் சுரேஷ் அவன் மனைவி சுதா இருவரும் முன்னாடி ரங்கநாதனை டேய் பொட்டையா நில்லுடா என்று சொல்லி சுதா ரங்கநாதனை கையால் முதுகில் அடித்தார் என்றும், அப்போது அங்கு இருந்த போலீசார் ஓடிவந்து தடுத்த போது அவர்களை கீழே தள்ளிவிட்டு விட்டு நீங்க என்ன

அவங்களுக்கு பாதுகாப்புக்கு வந்தீங்களா எங்களுக்கு பாதுகாப்புக்கு வந்தீங்களா என்று சொல்லி அவர்களையும் தாக்கினார்கள் என்றும்,

5)அவங்களுக்கு பின்னாலேயே கோபால், கோபால் மகன்கள் ரமேஷ், சங்கர், ரவி, மனைவி பழனியம்மாள் மருமகள் பிரதீபா எல்லோரும் கையில் உருட்டுகட்டை, கொடுவாள், கல் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வந்து தாக்கினார்கள் என்றும், அதை தடுத்து வந்த போலிசாரையும் அடித்து விட்டு ரங்கநாதனை தாக்கினார்கள் என்றும், ரங்கநாதனுக்கு வாயில் அடிப்பட்டு ஆனது என்றும், அப்போது தகவல் கேள்விபட்டு அங்கு வந்த ரங்கநாதன் மகன் செந்தில்குமார் மற்றும் மருமகன் சதீஸ்குமார் இருவரையும் அவர்கள் தாக்கியதில் அவர்களுக்கும் காயமானது என்றும், அங்கு இருந்த என்னையும் சந்திரன் பசுவன் ஆகியோரையும் தாக்கினார்கள் என்றும், அவர்கள் தாக்கியதில் ரங்கநாதனுக்கு மூன்று பற்கள் உடைந்து விட்டது என்றும், அவர்கள் எல்லோரும் உருட்டு கட்டை, கல், கொடுவாள் ஆகியவற்றால் தாக்கியதால் நாங்களும் அவர்களை தடுத்ததில் சுரேஷ், ரமேஷ. கோபாலுக்கு காயமானது என்றும், இரு தரப்பினரும் கற்களை வீசி தாக்கியதில் உட்காயம் ஆனது என்றும், அங்கு ஏற்பட் கூச்சலை கேட்டு ஊர்காரர்கள் கூடுவதை பார்த்து நாங்கள் கிருஷ்ணாகவுணடனூர் பக்கம் போய்விட்டோம் என்றும், *108* ஆம்புலன்சுக்கு போன் செய்து அது வந்ததும் நான் ரங்கநாதன், செந்தில், சதீஷ்குமார் ஆகியோரை ஆம்புலன்சில் ஏற்றி தருமபுரி ஜி.எச்சுக்கு அழைத்து போய் அட்மிட் செய்தேன் என்றும் எனக்கு வெளிக்காயம் எதுவும் ஆகாததால்

நான் சிகிச்சைக்கு சேரவில்லை என்றும், *4.12.2013* தேதி போலிஸ் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்துபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை .. இல்லை